முரசொலி

ஆசிரியர்: மு.கருணாநிதி

—வார இதழ்—

முரசு 6 | 4-7-58 வெள்ளி | ஒலி 12

[‘அன்னையின் ஆணை’ படத்தில் சென்சார் வெட்டிய வசனங்களுடன்]

நாடகம்

ஒலி:

“போர் வெறியனயிருந்த அசோகன் புத்தர் தர்மத்தைப் புவனமெங்கும் எடுத்து ஓதுவதற்கு முன்னல், இமய முதல் குமரி வரை பரவியுள்ள இதே உபகண்டத்தை ஒரு குடைக்கீழ் கட்டியாள நினைத்தான். அதனல் கலிங்கமென்னும் சின்னஞ்சிறிய — ஆனல் சுதந்திரமான நாட்டினை நோக்கி அடிபணியச் சொன்னன். ஆனல் கலிங்கமோ அடிமைப்படுவது ஆகாத காரிமென்று ஆர்பரித்து நின்றது. அதன் பிறகு...”

[காட்சி—1]

அசோகன் அவை:

அசோகன்: என்ன சொன்னன் கலிங்க நாட்டான்? நந்த வம்சத்தைப் பூண்டோடு நிர்மூலம் செய்து, அந்தண குல சிரேஷ்டராம்—அவனியெங்கும் தேடி அலைந்தாலும் காண முடியாத அரும் பெரும் பண்டிதராம்—சாணக்கியரின் ராஜ தந்திர மூளையிலே ஊறி வளர்ந்த இந்த அசோக வர்த்தனனுக்கா அடி பணிய மறுத்தான்? பேதமை! பேதமை!

தானைத் தலைவரே! தகுதி சிறிதுமில்லாத் தருக்கர் கூட்டத்தை இடுப்பொடித்துப் போடும் எனதருமைத் தளபதியே! என் தோள்கள் தினவெடுக்கின்றன! எனது வாளும் வேலும் இரத்தத்தை ருசி பார்க்கத் துடிக்கின்றன! போர்த் திமிர் பிடித்த என் புஜபல பராக்கிரமம் அந்தக் கலிங்க பூமியை எனது பாதத்தடியிலே போட்டு மிதித்துத், துவைத்து, நசுக்கி, அமிழ்த்தி, சந்தனமாக எடுத்து என் மார்பிலே பூசிக் கொள்ளத் துடிக்கிறது!

அமைச்சரே! ஆரியா வர்த்தத்தின் அருந்திறற் காவலரே! போர்ப்பறைமுழங்கவேண்டும்! தென்னகத்தின் வாயிலில் இரத்தத் தடாகம் உடைப்பெடுத்து ஓட வேண்டும்! அது கண்டு இமயத்தின் பிடரியிலே இலாஞ்சனையைப் பொறித்த தமிழகத்து வேந்தர்கள் நம் காலடியிலே படிகழற்றி வைத்து அடி பணிந்து வணங்க வேண்டும்!......ஆஹா!...... என்ன சொல்லுகிறீர்?...... என்ன சொல்லுகிறீர்?

அமைச்சர்: சொல்லுவதற்கு என்ன இருக்கிறது? விந்தியத்தின் விளிம்பிலே ஆர்யா வர்த்தத்தார் அடியெடுத்து வைத்ததில்லை — என்ற மாபெரும் பழியைப் போக்குவதற்கு இதை விட்டால் வேறு சந்தர்ப்பமில்லை, சக்கரவர்த்தி!

தளபதி: அசோக மன்ன! ஆணையிடுங்கள்! வெட்டிவா என்றுரைத்தால் பகைவர் கூட்டத்தைக் கூண்டோடு கட்டிவந்து உங்கள் காலடியிலே குவிக்கிறோம்!

அசோகன்: சபாஷ்! சபாஷ்!... யுத்த பேரிகை முழங்கட்டும்! அதுவே விரைவிலே ஜெய பேரிகையாக மாறி ஒலிக்கட்டும்!.... வெற்றி ...வெற்றி!...அதைத் தவிர இந்த அசோகனின் வாழ்க்கை அகராதியிலே வேறு வார்த்தைகளே இடம் பெறக் கூடாது! முழங்கட்டும் போர் முரசம்! அணிவகுத்து நிற்கட்டும் இரத கஜ துரக பதாதிகள்! புறப்படுங்கள்!... புறப்படுங்கள்!!...

[அப்போது பௌத்த பிட்சு ஒருவர் அங்கு வருகிறர்.]

பிட்சு: நிறுத்து! நிறுத்து! அசோக வர்த்தன! என்ன காரியம் செய்யத் துணிந்தாய்? வாலிப முடுக்கும், வாழ் நாளிலே எதையாவது சாதிக்க வேண்டும் என்ற நினைப்பும் ஒருங்கே கொண்ட நீ எப்போதப்பா இப்படிக் கொடுங்கோலனக மாறினய்?

அசோகன்: புத்த பிட்சுவே! என்ன சொல்கிறீர் இப்போது?.....கலிங்கத்தோடு யுத்தம் கூடாது என்று சொல்கிறீரா?

பிட்சு: இல்லை; யுத்தமே கூடாது என்கிறேன் நான்!

அசோகன்: அதை யாராவது புடவை கட்டிக் கொண்டிருக்கும் புத்திசாலியிடத்தில் சப்தம் போட்டுச் சொல்லும்!...

பிட்சு: அசோகா! நீ அறியாமல் பேசுகிறாய். கலிங்கம் என்னவோ கீரைப் பாத்தி நாடுதான்! ஆனாலும் அது உன் வம்சத்தவா யாராலும் நெருங்க முடியாத கீர்த்தி வாய்ந்தது என்பதை மாத்திரம் மறந்து விடாதே!

அசோகன்: அதை மறக்காததால்தான் இப்படி மறக்கோலம் பூண்டிருக்கிறேன் நான்! என் தாத்தா விந்தியம் தாண்டி காலெடுத்து வைக்க விரைந்தார்; புறமுதுகிட்டு ஓடிவந்தார்! என் தந்தை பிந்துசாரரும் படை கொண்டு சென்றார்; ஆனால் தோல்விப் புயலைத் தாங்காமல் திரும்பி வந்தார்! இதோ, வில்லிலிருந்து புறப்பட்ட அம்புபோல் புறப்பட்டுவிட்டான் அசோகன்! இனி அவன் முன் நின்று உபதேசம் செய்வோர் தூசுக்குச் சமானம்! எட்டி நின்று எள்ளி நகையாடுவோர் புழுதிக்குச் சமானம்!...அஞ்சா நெஞ்சு படைத்த அசோக வர்த்தனன் ஆணையிடுகிறான்—கோழைகளே; விலகிப் போங்கள்! இரத்தம் கண்டு அச்சம் கொள்ளும் மோழைகளே; ஓடிப் போங்கள்! 'வாழ்வா; சாவா; பார்த்து விடுவோம் ஒரு கை!' என்று வெஞ்சினம் கூறும் வீரர்களே; என்னைப் பின் தொடர்ந்து வாருங்கள்!...என்னைப் பின் தொடர்ந்து வாருங்கள்!!

பிட்சு: அசோகா! அசோகா!...

[என்று அழைக்க, அசோகனும் தளபதியும் இதர வீரர்களும் திரும்பியும் பாராது செல்கின்றனர்.]

•

[காட்சி—2]

போர்க்களம்

ஒலி:

"போர்! போர்! உக்கிரமான போர்! ஒருநாள் அல்ல; இருநாள் அல்ல; மாபெரும் மகதத்தின் மானம் பறிபோகும் விதத்தில் சின்னஞ்சிறு கலிங்கம் நூற்றி இருபது நாட்கள் போர் நடத்திற்று! முடிவு...? இமயம் எதிர்த்தால் எறும்பு என்னாவது? கலிங்கம் வீழ்ந்தது!...கலிங்கம் வீழ்ந்தது!...ஆனால்...

"விளைவு...? பஞ்சமும் பட்டினியும் தலைவிரித்தாடின! இலட்சோப இலட்சம் பேர் போரிலே கலந்து — மார்பிலே வேல் தாங்கி — சாவிலே சேர்ந்தார்கள்! தொத்து நோய் வேறு ஆயிரக் கணக்கானோரைக் கொத்திச் சாப்பிட்டது!...

"ஆனால்...அன்று அசோகன் வாழ்நாளில் முதல் தடவையாக அமைதியின்றி அலைந்தான்! சாந்தியின்றி சஞ்சலப்பட்டான்! நிம்மதியின்றி நிலைதடுமாறினான்!... அந்த நேரம்..."

[போர்க்களத்தை சுற்றி வருகிறான் அசோகன். ஒரு சவத்தை அணைத்துக் கொண்டு கிழவி ஒருத்தி அழுது கொண்டிருப்பதைக் காண்கிறான்.]

அசோகன்: தாயே! தாங்கள் யார்?

கிழவி: என் மகன் இறந்து விட்டான்! கதறிக் கதறி தொண்டை வரண்டு விட்டது...தண்ணீர்!........தண்ணீர்!...

[அசோகன் தண்ணீர்ப் பையை எடுத்துத் தருகிறான்.]

அசோகன்: இதோ இருக்கிறது, தாயே!

கிழவி: இந்த அகால நேரத்தில் மறைந்துவிட்ட என் மகனே வந்ததுபோல் நீ வந்திருக்கிறாய்; யாரப்பா நீ?

[அவள் கைகளைக் குவிக்க அசோகன் தண்ணீர் ஊற்றிக் கொண்டே...]

அசோகன்: சாம்ராட் அசோகன்!

[அந்தப் பெயரைக் கேட்டதும் திடுக்கிட்ட அந்த வயோகத் தாய், தொண்டைக்குள் விழுங்க இருந்த தண்ணீரை அவன் முகத்திலே உமிழ்கிறாள்.]

கிழவி: சாம்ராட் அசோகன்! சாம்ராஜ்ய வெறிபிடித்த சாம்ராட அசோகன்! எங்கள் வருங்கால சந்ததிகளை 'வெடுக்'கென்று வாயில் போட்டு விழுங்கிக் கொண்ட வெறிபிடித்த அசோகன்! பூவும் மஞ்சளுமாய் இருந்த பெண்களை விதவைகளாக்கிப் புலம்பித் தவிக்க வைத்த அசோகன்! அய்யோ!.....அவசியமின்றி போர் நடத்தி இத்தனை பேரை பலிவாங்கியிருக்கிறாயே; உனக்கு இருதயம் எனபதே கிடையாதா? நீ அண்ணன் தம்பி—அக்காள் தங்கை—இவர்களோடு பிறக்கவே இல்லையா? நீ மனிதன் தானா? அல்லது மரத்தால் செய்த உணர்ச்சியற்ற பதுமையா? அய்யோ! நீ கொலைகாரன்! இரத்த வெறிபிடித்த வேங்கையினும் கொடியவன்! உன் கையால் தண்ணீர் குடிப்பதைவிட சாவதே மேல்!...

[அசோகன் திரும்புகிறான். முன்பு அவைக் கூடத்தில் அறிவுரை கூறிய அதே பௌத்த பிட்சு வருகிறார்.]

பிட்சு: புத்தம் சரணம் கச்சாமி! தர்மம் சரணம் கச்சாமி!

அசோகன்: துறவியே! ஆந்தையும் வௌவாலும் அலைகின்ற இந்த நேரத்தில்—கழுகும் கோட்டானும் குடியிருக்கும் இந்த இடத்தில்—நீங்களா?

பிட்சு: ஆமாம்; நோயிருக்கும் இடத்தில்தானே வைத்தியனுக்கு வேலை? அதனால்தான் மண்ணாசை என்னும் தொழு நோய் பிடித்துத் தேம்பி அலையும் உன்னைத் தேடி வந்திருக்கிறேன்!

அசோகன்: பித்தபிட்சுவே! ஏற்கனவே ஏர் முனைப்பட்ட நஞ்சை நிலம்போல புண்ணாகி இருக்கிறது என் உள்ளம்! தயவு செய்து மீண்டும் என்னைக் கெடுத்து விடாதீர்கள்!

பிட்சு: அசோக வர்த்தனா! இந்த ஆழிசூழ் உலகத்தில் கெடுக்க முடியாத நபர்களே இல்லை! வெள்ளிப் பணத்துக்காக உடல் இன்பத்தை அள்ளி அள்ளித் தரும் ஒரு விலை மாதைக் கூட கெடுத்து விடலாம், அவளை நல்ல உள்ளத்தோடு ஒருவன் திருமணம் செய்து கொள்வதால்!

க்ஷத்ரிய குலதிலகா! கொஞ்ச நேரம் உன் காதுகளை எனக்குக் கடன் கொடு! ஓரே ஒருமுறை சிந்தித்துப் பார்! எப்படிப் பெற்றாய் இந்த கலிங்க பூமியை? அடுக்கடுக்காய் கபால ஓடுகளைக் கொட்டி நிறுத்தி — ஆயிரமாயிரம் வீரர்களைக் கொன்று குவித்து — அவர்களது விதவை மனைவிமார்கள் அறுத்தெறிந்த அழகுமிகுக் கூந்தலைக் கயிறாகத் திரித்து—இரத்தம் தோய்ந்த கரங்களால் உன் வெற்றிக் கொடியைப் பறக்க விட்டிருக்கிறாய்!

இதுவா வீரம்?
இதுவா வெற்றி?
இதுவா விவேகம்?
இதுவா மானம்?

இல்லை; அவமானம்! அவமானம்!!

அசோகன்: போதும், பூஜ்யரே!...தெளிந்த நீர்போல இருந்த என் சித்தத்தை அறிவுக்கல் எறிந்து குழப்பி விட்டீர்கள்...ஐயோ! எனக்குப் பைத்தியமே பிடித்து விடும்போல் இருக்கிறதே! என் முன்னால் நில்லாதீர்கள்! போங்கள்.....போய் விடுங்கள்...போய் விடுங்கள், இந்த இடத்தை விட்டு!

பிட்சு: போகிறேன்; ஆனால் அசோகவர்த்தனா! மறந்து விடாதே—

அன்புதான் இன்பவூற்று!
அன்புதான் உலகஜோதி!
அன்புதான் உலக மகா சக்தி!

[போகிறார்...'அன்புதான் இன்ப ஊற்று! அன்புதான் உலக ஜோதி! அன்புதான் உலக மகா சக்தி!' என்ற வாசகங்கள் அசோகன் முகத்தில் எதிரொலிக்கின்றன.]

அசோகன்: அன்புதான் இன்ப ஊற்று! அன்புதான் உலக ஜோதி! அன்புதான் உலக மகாசக்தி! ஆம்; என் கண்கள் திறந்தன! பூட்டிய சிந்தனைக் கூட்டின் இரும்புக் கதவுகள் உடைந்தன!

அசோகா! நீ அருள் பெற்றாய்! மருள் துடைத்தாய்! அய்யோ; இந்த அநாகரிக மனிதப் பதரின் அற்ப ஆசையால் — வெற்றிப் பித்தத்தால் நூறாயிரம் பேர் உயிரைத் தத்தம் செய்திருக்கின்றனரே! நூற்றி ஐம்பதாயிரம் பேர் கையிழந்து; காலிழந்து; கண்ணிழந்து; மெய்யெலாம் புண்ணளிந்து புலம்பித் தவிக்கின்றனரே! என்ன செய்வேன்? இந்தப் பாபத்தைக் கழுவுவதற்கு கங்கை சென்றாலும் அந்தக் கங்கை நீரும் களங்கப்பட்டுவிடுமே! இத்தனைக்கும் காரணம்? இந்த வாள்!...வில்!...வேல்! ...ஆகா...இந்தக் கொலைக் கருவியினால் எத்தனை ஆயிரம் உயிர்களைக் கிள்ளி எறிந்திருக்கிறேன்? இந்த வில்லினால் எத்தனை இளம் இதயங்களை வகிர்ந்திருக்கிறேன்? இந்த வேலினால் எத்தனை மனித இதயங்களைக் கீறி எறிந்திருக்கிறேன்? அய்யோ!.......... கொடுமை!...கொடுமை!... இனிமேல் இந்த நிலை நீடிப்பது மடமை! மடமையிலும் மடமை!

ஆமாம்...அக்ரோணிக் கணக்கிலே எதிரிகள் வந்து குவிந்தாலும் தொகை தொகையாய அவர்களை எதிர் நிறுத்தி ஒரே வீச்சால் வெட்டி வீழ்த்திய என வீர வாளே! இனி ஒழிந்து போ என் உறையை விட்டு!

தாவி வரும் வேல் தடுத்து என் ஆவி காக்கப் பயன் பட்ட என் வீரக் கவசமே! இனி ஓடிப்போ என் உடலை விட்டு!

கடும் புயலாய்ச் சீறிவந்த காட்டானை பலவற்றைக் கூறு போட்டு என் அங்கத்தில் வீற்றிருக்கும் வீரக் கங்கணமே! கழன்றுவிடு என் கையை விட்டு!

குபுகுபுவெனக் குருதி கொட்டி, குள்ளநரிக் குணம் கொண்டோரை குபபுற வீழ்த்தி வீரத்திற்கு விளம்பரமாக நின்ற வீர வடுக்களே! மறைந்து போங்கள் என் மார்பை விட்டு!

இனிமேல் இந்த அசோகன் மாறிவிட்டான்! தலைகீழாக மாறிவிட்டான்! ஏ, கலிங்கமே! தென்னகத்தின் வாயிற்புறமே! இன்று முதல் எனக்குப் பொன் வேண்டாம்! மண் வேண்டாம்! மணிமுடி வேண்டாம்! இன்று முதல் நான் உருவத்தில் தான் சக்கரவர்த்தி; உள்ளத்தில் பிட்சு மூர்த்தி...போதி மரத்துப் புத்தனே! ஆண் பெண் தவிர சாதி வேறில்லை என்று மேதினிக்குச் சாற்றிய புத்துலகச் சித்தனே! நீதான் வேண்டும்! உன் அன்புதான் வேண்டும்! அறம்தான் வேண்டும்! என்னை ஏற்றுக்கொள்!... என்னை ஏற்றுக்கொள்!... என்னை ஏற்றுக்கொள்!

[என்று புத்தர் சிலையின் காலடியில் வீழ்கிறான். 'புத்தம் சரணம் கச்சாமி' என்ற பாடல் பின்னணியில் ஒலிக்கிறது.]

கோவை மாவட்ட தி.மு.க. மாநாடு

வெள்ளி 4—7—58 சென்னை

சுயரூபம் தெரிகிறது!

விடுதலைப் போராட்டம் ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் மட்டுமல்ல; ஐரோப்பாவிலும்கூட உண்டு என்பதை எடுத்துக்காட்டுவதைப்போல **1956**—ம் ஆண்டு, அக்டோபர் மாதம், ஹங்கேரியிலிருந்து உலகெங்கும் அதிரும் வண்ணம் முழங்கிற்று உரிமை முழக்கம்!

"சோவியத் யூனியனின் கீழே அடிமையாக இருக்கிறோம். எங்களது தேசிய உணர்ச்சி கௌரவிக்கப்படுவதில்லை. காலனி ஆதிக்கம் என்கிற வரி வேங்கைப்புலிதான் இங்கே பசு வேடம் பூண்டு எங்களைப் பிடுங்கிச் சாப்பிடுகிறது"—என்கிற பின்னணியிலே அங்கே உரிமை முரசம் தட்டப்பட்டது.

ஒவ்வொரு தொழிலைச் சார்ந்தவர்களும் அந்த விடுதலைச் சேனையிலே தங்கள் பெயரைப் பதிவு செய்து கொண்டார்கள்.

மாணவக் காளைகள் அந்த அணியிலே பெரும் பங்கு வகித்தார்கள்.

ஸ்டாலின்—இரும்பு மனிதர் என்று பெயரெடுத்தவர்!

நடமாடும் தெய்வமென்று வணங்கப்பட்டவர்!

லெனினுடைய ஏக வாரிசு என்று வர்ணிக்கப்பட்டவர்!

—ஹங்கேரியின் புரட்சிக்காரர்கள் அவரை அப்படி நினைக்கவில்லை!

ஏகாதிபத்தியத்தின் சின்னம்—அடக்கு முறையின் அதிகாரி—சுரண்டல் இயந்திரத்தின் சூட்சமதாரி!

—இப்படித்தான் ஸ்டாலின் ஹங்கேரியப் புரட்சிக்காரர்களின் கண்களுக்குக் காட்சி யளித்தார்!

அதன் விளைவாக ஆகாயத்தை அளந்து கொண்டிருந்த ஸ்டாலினுடைய பிர்மாண்டமான சிலை சுக்கு நூறாக உடைத்தெறியப்பட்டது!

ஜனவரி **6**—ம் தேதியன்று எப்படி 'நேருவின் மோகம்' என்ற மகத்தான மாயை சென்னையிலே தூள் தூளாக்கப்பட்டதோ; அதேபோல—ஆனால் பலாத்காரத்தின் அடிப்படையிலே—பீரங்கி முனையிலே—பல்லாண்டுகளாக நிறுவப்பட்டிருந்த ஸ்டாலின் மோகத்தை அஸ்தியாக்கி ஆற்றிலே கரைத்தனர் ஹங்கேரியிலே!

அதன் விளைவு...? சோவியத் யூனியனின் செஞ்சேனை ஹங்கேரிக்குள்ளே அணிவகுத்துச் சென்றது.

1956, அக்டோபரில் அந்தச் சின்னஞ்சிறு நாடு ரஷ்யாவின் இரும்புப் பிடியிலிருந்து விலகி ஐந்து நாட்கள் சுதந்தர வாழ்க்கை எப்படி இருக்கும் என்பதை சுகித்தது.

அங்குள்ள விடுதலைச் சேனையின் வலுவினைக் கண்டு; சாதாரண பாமரனும் வீட்டுச் சாமான்களைப் படைக்கலன்களாக உபயோகிக்கும் பான்மையினை உணராது; சோவியத் உதவிப் பிரதமர் அனஸ்தாஸ் மிக்கோயன் செஞ்சேனை 'வாபஸ்' பெறுமென்று உத்தரவாதம் கொடுத்தார்.

இது கேட்டு புரட்சிக்குத் தலைமை வகித்த இம்ரே நாகி இரட்டிப்பு மகிழ்ச்சியடைந்தார்.

ஆனால், இந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை.

நான்கு நாட்கள் கழித்து சோவியத் டாங்கிகள் புடாபெஸ்டைத் திடீரென்று வளைத்துக்கொண்டு விட்டதாக வானொலியிலே அறிவித்தார்.

சிற்றெரும்பை நசுக்கி யெறிவதைப்போல சோவியத்தின் செஞ்சேனை ஹங்கேரிப் புரட்சிக்காரர்களை நசுக்கி யெறிந்தது.

காதர் என்னும் பொம்மையைக் கைக்குள் போட்டுக்கொண்டு அவர் கையிலே ஆட்சிப் பொறுப்பை ஒப்புவித்தது, சோவியத் அரசாங்கம்!

பாவம்; மக்கள் எழுச்சி மிருகத்தனமாக நசுக்கப்பட்டது!

புரட்சித் தலைவர் இம்ரே நாகி யூகோஸ்லேவியாவின் தூதுவராலயத்துக்குள்ளே தஞ்சம் புகவேண்டிய அவசியமேற்பட்டது.

புடாபெஸ்ட் நகரத்து வீதிகளிலே விழுந்து கிடந்த பிரேதங்களை அப்புறப்படுத்திவிட்டு, காதர் ஒரு அறிக்கை விடுத்தார்.

"நாகிக்கும் அவரது குழுவினருக்கும் அவர்களுடைய கடந்த கால கொள்கைகளை மனதில் வைத்துக்கொண்டு எந்த விதத் தீங்கும் இழைக்க மாட்டோம். அதனால் அவர்கள் தாராளமாகத் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிச் செல்லலாம்!" — இதுதான் காதரின் அறிக்கை.

—இதை நம்பிக்கொண்டு நாகியும் அவரது குழுவினரும் யூகோஸ்லேவியா தூதுவராலயத்தை விட்டு வெளியேறினார்கள்.

அந்தோ பரிதாபம்! வழியிலேயே சோவியத் போலீசார் அந்த விடுதலை வீரர்களை—தேசிய எழுச்சியின் சின்னங்களைக் கடத்திச் சென்றார்கள்! ருமேனியாவில் அவர்கள் நலமாக வாழ விரும்பி அபிப்பிராயம் தெரிவித்ததாகக் கதை கட்டினார்கள்!

நாமும் அப்படித்தான் நம்பினோம்; ஆனால் சென்ற வாரம் சோவியத் யூனியனிலிருந்து வந்த செய்தியோ உலகத்தோரின் கண்ணீரையே வரவழைத்து விட்டது!

இம்ரே நாகியும்; ஹங்கேரிய விடுதலை எழுச்சிச் சேனையை நடத்திக் கொடுத்த பால் மேலேட்டர் என்பவரும்; இன்னும் இரு தலைவர்களும் தூக்கிலிடப்பட்டார்களாம்!

குருஷேவ் ஸ்டாலினைப்போல் இரத்தவெறி பிடித்தவர் அல்ல—என்றுதான் இதுவரை எல்லோரும் நம்பிக்கொண்டிருந்தார்கள்.

இதுவரை அவரது நடவடிக்கைகளும் அப்படித்தான் இருந்து வந்தன.

ஆனால் இப்போதுதான் அவரது சுயருபம் உலகுக்குத் தெரிய ஆரம்பித்திருக்கிறது.

இதற்குக் காரணம் என்ன?

ஸ்டாலின் கோர சொருபனாக இருந்தார். 'இம்' என்றால் வனவாசம்; 'என்' என்றால் சிரச் சேதம் — அவரது ஆட்சிக் காலத்தில்! ஏன்? அந்தக் கெடுபிடி யிருந்தால்தான் ஹங்கேரி போன்ற சின்னஞ்சிறு நாடுகளைக் கட்டியாளலாம் என்கிற நிலை அவரை அப்படிச் செய்தது.

அந்த அடக்குமுறை ஆட்சிக்கு மக்கள் மன்றத்திலும் உலக அரங்கத்திலும் மதிப்பில்லை என்று உணர்ந்து கொண்டார் குருஷேவ்!

அதனால்தான் தனது பதவிக் காலத்தில் கெடுபிடியைச் சிறிது தளர்த்தினார். மாலெங்கோவ்; புல்கானின்; மாலட்டோவ் போன்றவர்களை உயிரோடு உலவ விட்டார்.

கெடுபிடியில்லாமல் ஆட்சிச் சக்கரத்தை உருட்ட முடியுமா—என்று பார்த்தார்.

விளைவு?...ஹங்கேரிப் போராட்டம்; போலந்திலே கலகம்!

ஆமாம்; பசு வேஷம் பலிக்கவில்லை! ஸ்டாலினைப்போல் புலியாக இருந்தால்தான் சாம்ராஜ்யம் நிலைக்க முடியும் என்கிற நிலைமை அங்கே உருவாகி விட்டது போலும்!

அதனால்தான் ஸ்டாலின் வழியிலே பீடு நடை போட்டு நாகியையும் அவரது மூன்று தோழர்களையும் தூக்கிலிட்டிருக்கிறார், காட்டுமிராண்டித்தனமாக!

இதுபற்றி நமது இந்தியக் கம்யூனிஸ்ட் தலைவர்கள் என்ன சொல்லுகிறார்கள்?

மௌனம்தான் பதிலாகக் கிடைக்கிறது. என்ன சொல்வதென்று தெரியாமல் ஜூலை முதல் வாரத்தில் நடப்பதாக இருந்த கட்சியின் நிர்வாகக் கூட்டத்தை; மக்கள் மன்றம் இந்தப் பிரச்சினையை மறக்கட்டும் என்று ஆகஸ்ட் மாதத்திற்கு ஒத்திவைத்திருக்கிறார்களாம்!

டெல்லி பாராளு மன்றத்திலே மரண தண்டனை ஒழிப்பு மசோதா வந்தபோது கம்யூனிஸ்ட் தலைவர் பூபேஷ் குப்தா, அரசியல் குற்றமானலும், எந்தக் குற்றமானலும் இதற்கு மரண தண்டனை விதிப்பது கூடாது' என்று கண்டித்துப் பேசினார்.

அதே பூபேஷ் குப்தாதான் இப்போது, 'அரசியல் குற்றத்திற்காக நாகி தூக்கிலிடப்பட்டது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?' என்று நிருபர்கள் கேட்டபோது எதுவுமே பதில் சொல்ல மறுத்து விட்டாராம்.

குருஷேவைப் பார்த்து கெடுபிடியைக் கைவிட்டு கொள்கை மாறுதல் செய்து கொண்டவர்கள் இந்திய கம்யூனிஸ்டுகள்!

குருஷேவ் இப்போது 'லகானை' இழுத்துப் பிடித்து விட்டார்!

இந்தியக் கம்யூனிஸ்டுகள் என்ன செய்யப் போகிறார்கள்?

—அவர்களது செயல் மூலம்தான் நமக்குப் பதில் கிடைக்க வேண்டும்!

ஃ

ஜூலை 5, 6-ல் கோபியில் கூடுகிறது!

சென்ற இதழில்...

மைனு தூக்கிட்டுக் கொண்ட மரத்தடியில் தீச்சட்டி சிங்கரமும், அறவாழியும் பேசிக் கொண்டிருக்கிற நேரத்தில், புல்லாங்குழல் இசை முன்னுல் வர, பின்னல் சுருளிமலை வந்து கொண்டிருக்கிருன்...

சிங்காரம், சுருளிமலையின் அக்காள் பொன்மணியைத் தனக்குத் திருமணம் செய்துவைக்க தங்கை கற்பூரம் முயற்சிப்பதை எடுத்துச் சொல்லி, ஆனல் தானே அவளைத் தனது இரண்டாவது தங்கையாகக் கருதுவதாகக் கூறுகிருன். அதோடு கரகமாடிக் கண்ணன் பொன்மணியின்மீது ஒரு கண் வைத்திருக்கிருன் என்று சொல்லி, அறவாழியின் நெஞ்சில் திகிலைப் பாய்ச்சுகிருன்!...

பின், மறுநாள் பள்ளியில் சந்திப்பதாகக் கூறிவிட்டு சிங்காரம் சென்றுவிடுகிருன்...

அப்போதுதான், அவ்விடத்தை அடைந்த சுருளிமலையிடம், அவன் படிக்க வேண்டியதை—பகுத்தறிவு பெறவேண்டிய அவசியத்தை எடுத்துரைக்கிருன் அறவாழி...

ஆனல், அவன் சொல்லுவதை எல்லாம் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்த சுருளிமலை, கல கல வென்று நகைக்கிருன். பின், மடியிலிருந்து ஒரு காகிதச் சுருளை எடுத்து நீட்டுகிருன். ஐந்து தாள்கள் இணைக்கப்பட்டிருந்த மகஜர் அது! அதில், முதல் தாளில், அறவாழியை அந்த ஊர் பள்ளியை விட்டு மாற்றிட வேண்டும் என்பதற்கான காரணங்கள் எழுதப் பட்டிருக்கின்றன. மரியாதை இல்லாதவன்; ஊராரிடம் ஆணவமாக நடந்து கொள்கிருன்; எல்லாம் தெரிந்தவனைப்போல் மற்றவர்களுக்குப் புத்தி சொல்கிருன்; ஒழுங்காகப் பாடம் நடத்துவதில்லை; பிள்ளைகளை உருப்பட வைக்க மாட்டான்; வீண் கதை பேசுவதே பள்ளிக்கூடத்தில் வேலை—இப்படிப்பட்ட குற்றச் சாட்டுகளை முதல் பக்கம் முழுவதும் நிரப்பி விட்டு, அடுத்த தாள்களில் ஊர்மக்களின் கையெழுத்துக்கள் காணப்படுகின்றன...

பஞ்சாயத்தார் பரமசிவத்தின் கையெழுத்தே முதல் கையெழுத்து! யார் யார் கையொப்பமிட்டிருக்கிருர்கள் என்று வரிசையாகப் பார்த்து வந்த அறவாழி, இதயத்தில் சம்மட்டியடி விழுந்தது போல் திடுக்கிட்டான்...

காரணம்; கையெழுத்து வரிசையின் கடைசியில் பொன்மணியின் கையெழுத்தும் இருந்தது!

* * *

அறவாழியினல் அதற்கு மேல் எதுவும் பேச முடியவில்லை. எந்த ஒரு சந்திப்பை நினைத்து நினைத்து நெஞ்சத்தைத் தேனில் நனைத்துக் கொண்டிருந்தானே; அந்தச் சந்திப்பு கடைசியில் பெரும் ஏமாற்றத்தில் முடிந்தது கண்டு திகைத்தான். அவன் படித்த எத்தனையோ காதல் கதைகளில கூட இதுபோன்ற ஒரு அதிர்ச்சி தரக்கூடிய சம்பவத்தை அவன் கண்டதில்லை. காதலர்களைத் தங்கள் பேனு முனையினல் சிருஷ்டிக்கும் எழுத்தாளர்கள் கூட கொஞ்ச நாளைக்கு அவர்களை கொஞ்சி மகிழ வைத்து, அதற்குப்பிறகே இருவரிடையே பிளவு—பிரிவு—ஏககம்- வேதனை -வாட்டம்-இதுபோன்ற நிகழ்ச்சிகளை நுழைய விடுவார்கள்.

அறவாழியோ, தன் கதை முற்றிலும் புதிதாக அமைந்து விட்டதை எண்ணிச் சோர்ந்து போனுன். ஊரை விட்டுத் தன்னை மாற்ற வேண்டுமென்பதற்கு அவள் ஏன் ஒப்பமளிக்க வேண்டும்? புரியாத புதிராக இருந்தது! ஒருவேளை, முதல் நாள சநதபபில வதைக்கப் பட்ட காதல், சிறிது சிறிதாக செடியாகி, மரமாகி, தன் தலையிலேயே விழுந்து விடும் என்று பயந்து, முளையிலேயே கிள்ளியெறியலாம என்று அந்த முடிவுக்கு வந்திருபபாளோ? அறவாழிக்கு பதில் சொல்ல அங்கே யார் இருக்கிருர்கள். ஆலோசனையோ, ஆறுதலோ கூறுவதற்கு யாருமில்லை. சுருளிமலை மட்டுமே யிருந்தான். அவனும் அறவாழியின் உள்ளத்துப் புகைச்சலை உணர்ந்து கொண்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை.

மகஜர் தாளை சுருளிமலையிடம் கொடுத்து விடடு அறவாழி அந்த இடத்தை விட்டு வேகமாகப் புறப்பட்டான்.

"என்ன ஒன்னும் சொல்லாமல் போறீங்க?" என்று கூவினுன் சுருளிமலை.

"சொல்ல என்னப்பா இருக்கிறது? உங்க வீடே எனக்கு எதிரி யென்ருல் இனிமேல் இந்த ஊரில் எனக் கென்ன வேலை?" என்று கூறிவிட்டு அறவாழி அதை விட்டகன்ருன்.

சுருளிமலை, அறவாழி போவதையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்துவிட்டுப் பிறகு தன் வாகனத்தைத் தட்டிவிட்டான். நேரே பஞ்சாயத்தார் பரமசிவம் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தான். திண்ணையில் உட்கார்ந்திருந்த பஞ்சாயத்தார், "என்னபபா! உங்க வீட்டுக் கையெழுத்து வாங்கிட்டு வந்துட்டியா?" என்று கேட்டதும், சுருளிமலை மகஜரை அவரிடம் நீட்டினுன்.

அவர் அதைப்பார்த்துவிட்டு "பேஷ்! பேஷ்! அநேகமாக எல்லோருடைய கையெழுத்தும் ஆகிவிட்டது! இதை நீயே கொண்டுபோய் தபாலில் சேர்த்துவிடவேண்டும்!" என்று சுருளிமலைக்கு உத்தரவு போட்டார்.

கரகமாடிக் கண்ணனும், பஞ்சாயத்தார் பரமசிவமும் அறவாழியின்மீதுள்ள வெறுப்பை உடனடியாகக் காட்டிக் கொண்டு, அவசர அவசரமாக ஊராரிடம் கோள் மூட்டி, மகஜரைத் தயாரித்துவிட்டனர். சிங்காரம்—கண்ணன் இருவரின் சண்டையைக் காண வந்தவர்களிடமே அநேகமாக மகஜருக்கு வேண்டிய கையொப்பங்களை வாங்கிச் சேர்த்துவிட்டார்கள். மிச்சமுள்ள ஒன்றிரண்டு கையெழுத்துக்களும்

தூத்துக்குடி நிதி-

தோழர்களே! அனுப்புங்கள்!!

★ அதிகார பலம்—

★ பணபலம்—

★ படைபலம்—

அத்தனையையும் எதிர்த்துப் பாட்டாளிகளின் கழகம் போட்டியிடுகிறது, தூத்துக்குடியில்!

★ காலணு, அரையணுக்களாகக் காசு சேர்த்து ஜனநாயக உரிமையை நிலை நாட்டப் பாடுபடுகிருேம். நம்மிடம் மிட்டா மிராசுகள் இல்லை! தேவைப்படும் போது பணம் கொட்டுகிற தேசீய முதலாளிகள் இல்லை! தேய்ந்துபோன மக்களுக்குப் பணி புரியவே இத்தேக மெடுத்தோம் எனக் கருதியுள்ள கடமை வீரர் பாசறை நமது கழகம்! இந்தக் கழகத்தின் சார்பில் போட்டியிடும் நமது தோழர் சிவசாமி வெற்றி வாகை சூட—

நிதி குவித்திடுவீர்!

உங்கள் ஆதரவை—

அன்பை—

ஆர்வத்தை—

நன்கொடை அனுப்புவதன் மூலம் காட்டிடுவீர் இப்போதே!

நாட்கள் அதிகமில்லை!

நம்மிடமோ பெரும் பொருள் இல்லை!

சிறுதுளி-பெருவெள்ளம்!

செயல்! செயல்! அதுவும் இன்றே!

கொள்கை முரசு கொட்டுவதற்குக்

சுருளிமலைப் பொறுப்பில் விடப்பட்டன. அவனும் தன் வீட்டார் உட்பட மிச்சக் கையெழுத்துக்களைப் பெற்று வந்து தந்து விட்டான். மகஜரை அனுப்பவேண்டிய பொறுப்பும் அவன் தலையிலேயே கட்டப்பட்டதும் மிக்க மகிழ்ச்சியுடன் புறப்பட்டான்.

அவனுக்கு நன்றாகத் தெரியும், மகஜர் அனுப்பப்பட்டதும் அறவாழிக்குத் தொந்தரவு ஏற்படும் என்று! இந்தச் செய்தியை வீட்டிலே சொல்லி கையெழுத்து வாங்கச் சென்ற போது அவன் தாய் ஒத்துக் கொள்ளவில்லை. தமக்கையும் இஷ்டப்படவில்லை. அப்போது சுருளிமலை தந்த விளக்கத்தால் அவர்கள் இறுதியில் இணங்கி வந்தார்கள்.

ஊரில் முக்கால் வாசிப்பேர் கையெழுத்துப் போட்டுவிட்டார்கள். இனி, பூஞ்சோலை வீட்டார் போட்டாலும்போடாவிட்டாலும் நடக்கப்போகிற காரியம் நடக்கத்தான் போகிறது. போடாமல் கெட்ட பெயர் வாங்கிக் கொள்வதை விட்டு, நல்ல பெயர் வாங்கிக் கொள்ளலாமே — என்பதே அவன் வாதம். அதன் பிறகும் கவலைப்பட்ட தாயாரிடமும் அக்காளிடமும் அவன் சொன்ன சமாதானம்; எப்படியும் அந்த மகஜர் தபாலில் அனுப்பப்படாமல் இங்கேயே தன்னால் கிழித்தெறியப்படும் என்பதாகும்.

மகஜர் போய்ச் சேராத வழிக்கு சுருளிமலை தந்திரம் கையாளுகிறான் எனக் கண்ட பொன்மணிக்குத் தாங்க முடியாத பூரிப்பு! பஞ்சாயத்தாரையும் மற்றவர்களையும் ஏமாற்றி மகஜரை அவன் கைக்கு வரும்படிச் செய்து கொண்டானே தம்பி என்று அவனை வாழ்த்தினாள் பொன்மணி. அந்த வாழ்த்துதலைப் பெற்று பஞ்சாயத்தார் வீட்டுக்குப் போகிற வழியிலே தான் அவன் அறவாழியைச் சந்தித்தான். இதுவரையில் அவன் எண்ணியபடி எல்லாமே நடந்துவிட்டது. இறுதியாக மகஜரை நாசப்படுத்திவிட்டு, தபாலில் சேர்த்துவிட்டதாகப் பொய்யும் சொல்லலாமென்ற துணிவும் அவனுக்கு ஏற்பட்டு விட்டது.

ஆனால் பாபம்; அவனும் அவன் வாகனமும் பஞ்சாயத்தார் வீட்டைவிட்டு கொஞ்ச தூரம் நகருவதற்குள், அவசர அவசரமாகக் கரகமாடிக் கண்ணன் அங்கேவந்து சேர்ந்தான்.

அவனே, சுருளிமலையிடமுள்ள அந்த மகஜரைக் கொடுக்கும்படியும், தானே கொண்டுபோய் அஞ்சலில் சேர்த்து விடுவதாகவும் கூறினான். பஞ்சாயத்தாரும் அதை ஒத்துக் கொண்டார். சுருளிமலை எதுவும் பேச முடியவில்லை. தானே எடுத்துச் சென்று அதைக் குப்பையில் போட்டுவிட எண்ணியிருந்தான். ஆனால் நிலைமை மாறிவிட்டது. மகஜர் கரகமாடிக் கண்ணன் கையிலே சிக்கி விட்டது. அன்றைக்கே அது தபாலிலும் அனுப்பப்பட்டது.

இந்தச் செய்தியை பொன்மணியிடம் சுருளிமலை கூறியதும் அவளுக்கு நெருப்பிலே விழுந்ததுபோல் இருந்தது. தன் கையெழுத்தையும் அறவாழி பார்த்து விட்டான் என்பதைத் தம்பி மூலமே தெரிந்து கொண்டு மிக மிக வருந்தினாள்.

எப்படியாவது அறவாழியைப் பார்த்து, தான் செய்த தவறுதலுக்கு மன்னிப்பு கேட்க வேண்டுமென முடிவு செய்தாள். இரண்டு மூன்று நாட்கள் முயன்றாள்; முடியவில்லை. இரண்டு நாட்கள் கழிந்தபின் ஒருநாள், சந்தைக்குச் செல்வதற்காகப் பானை சட்டிகளைக் கூடையில் அடுக்கிக் கொண்டு புறப்பட்டாள் பொன்மணி!

போகும் வழியிலேதான் அந்தப் பள்ளிக்கூடம்! எவ்வளவோ நாட்கள் அதன் வழியே சந்தைக்குச் சென்றிருக்கிறாள். அன்று மட்டும் ஏதோ ஒரு காந்த சக்தி அவளை இழுத்து நிறுத்தியது!

காலை நேரம்...பள்ளியின் சுற்றுப் புறங்களைச் சீர்படுத்தும் வேலையில் தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்தார்கள். அவர்கள் எப்போது அந்த இடத்தை விட்டு நகருவது? பிறகு, அவர்களுக்குத் தெரியாமல் எப்போது அறவாழியைப் போய் சந்திப்பது? இப்படி எண்ணமிட்டவாறு அங்குமிங்கும் நடை பழகிக் கொண்டிருந்தாள். அறவாழியைச் சந்திக்காமல் போவதில்லை யென்ற திடமான முடிவுடனேயே சமயத்தை எதிர்பார்த்திருந்தாள்.

ஒரு ஆண்மகனுடன் வலியச் சென்று பேசுவது கிராமியப் பெண்களின் இலக்கணத்திற்கு ஒத்ததல்ல என்பதை அவள் புரிந்து கொண்டிருந்தாலும், தன்னைப்பற்றி அறவாழி கொண்டிருக்கும் தவறான எண்ணத்தை எப்படியாவது மாற்றியாக வேண்டும் — அதற்கு ஒரே வழி அவனோடு மனம் விட்டுப் பேசுவதுதான் என்பதைப் போராடிக்கொண்டிருக்கும் அவள் உள்ளத்திற்கு அறிவுறுத்தினாள். பள்ளிக்கூடத்து ஒதுக்குப்புற அறையொன்றில் அறவாழி நடமாடுவது அவளுக்குத் தெரிந்தது. ஆனால், அவன் அவளைக் கவனிக்கவில்லை. பொன்மணி, அந்த அறையைப் பார்த்தவாறு நின்று கொண்டிருந்தாள். அறவாழி வேறு புறம் திரும்பி உட்கார்ந்துகொண்டான். காலையில் எழுந்ததும் வழக்கமாக அவன் பாடுகிற,

“உலகமிசை உணர்வெழுப்பி
உதித்துவிட்டான் செங்
கதிரோன்”

என்ற பாடலை உரக்கப் பாடினான். பாடியவன் தனக்குத் தானே வெட்கப்பட்டுக்கொண்டான்.

காரணம்; அவன் பாடிய சமயத்தில் கிழக்கே செங்கதிர் இல்லை. வானம் இருண்டிருந்தது. மழை வருவதற்கான அறிகுறிகள் காணப்பட்டன. சிறிது நேரத்தில் மழைத் தூறலும் விழ ஆரம்பித்தது. அறவாழி ஜன்னல் கதவுகளைச் சாத்திவிட்டு மறுபடியும் உட்கார்ந்துகொண்டு திருக்குறளை எடுத்துப் புரட்ட ஆரம்பித்தான்.

எத்தனையோ நாட்கள் அவன் அதிகாலையில் திருக்குறளை எடுத்துப் படித்திருக்கிறான். அப்போதெல்லாம் நூலைப் புரட்டும்போது அறத்துப்பால் — பொருட்பால் — என்ற பகுதிகள் கண்ணிலே படும். அன்றைக்கு என்னவோ சொல்லி வைத்ததுபோல் மூன்றாவது பாலதான் அவன் கண்ணெதிரே வந்து நின்றது.

“காலையரும்பிப் பகலெல்லாம்
போதாகி
மாலைமலரும் இந் நோய்!”

—நாலைந்து தடவை திருப்பித் திருப்பி அந்தக் குறளை மனப்பாடம் செய்வதுபோல் படித்தான். அடுத்த குறளில் அவன் விழி தாவிற்று. தெருவிலே தொழிலாளிகள் மழைத் தூறலைக் கண்டதும் அவசர அவசரமாக வேலையை முடித்து விட்டுக் கரையேறியது பொன்மணிக்குச் சௌகரியமாகப் போயிற்று. பானை சட்டிகளைக் கீழே இறக்கி வைத்தாள். மெல்ல மெல்ல நடந்து அறைப் பக்கம் போனாள். பொன்மணியின் வருகை கண்ட அறவாழிக்குத் தூக்கி வாரிப் போட்டது.

“யார்? நீயா?” என்றான் ஆச்சரியத்தோடு!

“ஆமாம்!” என்றாள் அவள் நாணத்தோடு!

“தடால்...”

“படபட!” என்று தெருவிலே ஒலி கேட்டது. பானைகள் உடைந்த சப்தம்தான் அது! பொன்மணி, தெருப் பக்கம் ஓடிப் போய்ப் பார்த்தாள்.

வாசலில் நின்ற தென்னை மரத்திலேயிருந்து ஒரு பெரிய மட்டை கீழே விழுந்து, பானைகளை சுக்கல் சுக்கலாக உடைத்தெறிந்துவிட்டது.

தொடரும்

தூத்துக்குடி தொகுதித் தேர்தல்

★

கிளைக் கழகத் தோழர்களே! ஆதரவாளர்களே! பொதுமக்களே!

தூத்துக்குடித் தொகுதி இடைத் தேர்தல் அண்மையில் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அது 25—7—58-ல் நடைபெற இருக்கிறது. நம் கழகத்தின் நீண்டநாள் உழைப்பாளரும், பொதுக்குழு உறுப்பினரும், சென்ற முறை போட்டியிட்டு சிறப்பான வாக்குகளைப் பெற்றவரும் ஆன தோழர் எம். எஸ். சிவசாமி அவர்கள் கழகத்தின் சார்பாகப் போட்டியிடுகிறார்.

தேர்தல் பணிகளைச் சிறப்பாகவும், செம்மையாகவும் நடத்தத் தலைமைக் கழகச் சார்பில் தோழர்கள் மு. கருணாநிதி, கே. ஏ. மதியழகன், எஸ். முத்து ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தேர்தல் பணிகளை முன்னின்று நடத்தவும், தேர்தல் நிதி திரட்டவும் முற்பட்டுள்ளனர். அறிஞர் அண்ணா அவர்களும், சொற்பொழிவாளர்களும் சட்ட மன்ற—பாராளுமன்ற உறுப்பினர்களும், தேர்தல் பணிகள் ஆற்ற தூத்துக்குடிச் செல்கிறார்கள்.

கழகம் போட்டியிடும் முக்கியத்துவத்தை உணர்ந்து பாடுபடவும், பொருளுதவி புரியவும், அன்பும் ஆர்வமும் கொண்ட ஆங்காங்குள்ள கிளைக் கழகத் தோழர்களும், தனிப்பட்ட நண்பர்களும், குறிப்பாக நெல்லை மாவட்டத் தோழர்களும் கடமையுணர்ச்சியோடு முன்வர வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

நிதி தாரீர்! தேர்தல் நிதி தாரீர்! தேர்தலைப் பொலிவோடும் வலிவோடும் நடத்த நிதி தாரீர்! சிறப்பைத் தேடித் தர விரைந்தோடி வாரீர்! வாரீர்! என்று இருகை நீட்டி அழைக்கிறோம், வாரீர்!

‘அறிவகம்’
சென்னை—13
2—7—58

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச் செயலாளர், தி. மு. க.

தூத்துக்குடி தேர்தல் நிதி அனுப்பிவைக்கவேண்டிய முகவரி:—

பொதுச் செயலாளர், தி. மு. கழகம்,
‘அறிவகம்,’ இராயபுரம், சென்னை-13.

கூட்ட ஒத்திவைப்பு அறிவிப்பு

★

கோவை மாவட்ட மாநாட்டிற்குப் பிறகு தூத்துக்குடியில் தங்கி இடைத் தேர்தலுக்கான பணிகளில் ஈடுபட வேண்டியிருப்பதால், ஜூலை 25-ம் நாள் முடிய ஏற்கனவே ஒப்புதல் தந்துள்ள கூட்டங்களை ஒத்தி வைக்க வேண்டியவனாயிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,
மு. கருணாநிதி

கோபியில் கூடுவீர் விரைந்து!

ஒளி இழந்த கண்ணிறாய்

★ பார்! பார்! பார்! ★

அவரது வாய் திறக்கிறது என்றால்—உதடுகள் அசைகின்றன என்றால் — 'உலகத்தின் எட்டாவது அதிசயம் காணீர்' என்று வியப்புக் கடலில் மூழ்கி விடும் நாடு!

பேசி விட்டார் என்றாலோ—பூமி வெடித்து அதள பாதாளத்தை நோக்கிச் செல்லுகிறோமோ என்ற திகைப்பு ஏற்படும்!

'ஊமை ஊரைக் கெடுக்கும்' என்பார்களே; அந்தப் பழமொழியைத் தயவு செய்து மேலே குறிப்பிட்டவருடன் ஒப்பிட்டுப் பார்த்து விடாதீர்கள்! இந்த 'அரசியல் ஊமை' ஊரை ஏய்க்கப் புதுவழி கண்டிருக்கும் காங்கிரசின் தூண்களில் ஒன்று—கனம் காமராசர்!

இது அன்றைய நிலைமை!

இன்று அவர் பேசுகிறார்—செலலுமிடமெல்லாம் அவரது திருவாய் 'முத்துக்களை' உதிர்க்கின்றன — சட்ட சபையிலே பேசத் தயங்கும் அவர், மேடை கிடைத்த இடமெல்லாம் கோடை இடியென முழங்குகிறார்!

'மௌன விரத மனிதர்' மணிப் பிரவாள நடையிலே கூச்சமின்றிப் பேசுகிறார் என்பதில் மகிழ்ச்சிதான்!

ஆனால், திறந்த வாய் கக்குகின்ற தீயக் கருத்துக்கள்-பழுக்கக் காய்ச்சிய ஈயமென நம் செவிகளில் பாய்கின்றன!

நாடும் நல்லோரும் ஏற்றுக் கொள்ள முடியாத நச்சுக் கருத்துக்களை—நாராசச் சொற்களை—அள்ளி அள்ளி வீசுகிறார்! 'நம்புங்கள் இதை!' என்று வாதாடுகிறார்! 'உண்மை இது தான்!' என்றும் வழக்காடுகிறார்!

ஜால வார்த்தைகள்—

கவைக்குதவாத கற்பனை வாதங்கள்—

கடுமை கலந்த கோபச் சொற்கள்—

பரிதாபத்திற்குரிய காங்கிரஸ் துப்பாக்கிக்கு அடுத்தபடியாக இன்று நம்பியிருக்கும் இந்தக் கருவிகளைத்தான் காமராசரும் பயன்படுத்திப் பார்க்கிறார்! ஆகவேதான் 'காங்கிரசின் சாதனைகள் இவை' என்று பட்டியல் காட்டுவதற்கு முன்னால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளை—அந்தக் கொள்கைகளுக்குக் கொணர்ந்து காட்டும் ஆதாரங்களை அர்த்தமற்ற முறையில் மறுக்கிறார்! அடக்கி விட்டோம் என்று ஆனந்தப் பெருமூச்சு விடுகிறார்!

"...பிரிட்டிஷ் ஆட்சியின் காலத்தில் விடுதலைக்குப் போராடிய காங்கிரசைத் தூற்றி வந்த ஜஸ்டிஸ் கட்சி—சுயமரியாதைக் கட்சி இன்று தி. மு. கழகமாக மாறி, வடநாடு—தென்னாடு என்ற பிரிவினையை உண்டாக்கி கிளர்ச்சி செய்துவருகிறது. பொதுவாக இன்று தென்னாட்டு மக்கள் வடஇந்தியரைவிட அதிகமாக முன்னேறி, மிக நல்ல நிலைமையில் இருக்கிறார்கள்......வடநாட்டிலுள்ள பாமர மக்கள் தென்னிந்தியரைவிட உயர்ந்துவிடவில்லை..."

—சென்ற 27—6—58 அன்று, நாகையிலே இபபடி தென்னாட்டு நிலைமையை ரத்தினச் சுருக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறார் காமராசர்!

தென்னாடு வட இந்தியாவை விட முன்னேறிவிட்டதாம்; மிக நல்ல நிலைமையில் இருக்கிறதாம்—காமராசரது கூரிய கண்கள் இந்த மாபெரும் உண்மையைக் கண்டு பிடித்துவிட்டன! எதிரே வீற்றிருக்கின்ற மக்களை மண்பொம்மைகளாகக் கருதி இப்படி பூரிப்போடு சொல்லியிருக்கிறார்.

"ஆகவே வடநாடு — தென்னாடு பிரிய வேண்டுமென்பது அர்த்தமற்ற காட்டுக் கூச்சல்" —என்று அவரது 'கோயபல்ஸ்' வாதத்திற்கு முத்தாய்ப்பும் வைத்திருக்கிறார்!

இங்கேதான் சந்தேகம் ஏற்படுகிறது, அவரது பார்வையிலே என்ன பழுது ஏற்பட்டு விட்டது—என்று!

அவரது கண்கள் எந்த முன்னேற்றத்தை—பெருமைப்படத் தக்க எந்த நல்ல நிலைமையைக் கண்டு விட்டது?

தென்னகம் வெறும் புண்ணகமாகவே தருகின்ற காட்சி அவரது கண்களில் படவில்லையா?

வெட்கப்படத்தக்க வேதனைச் சம்பவங்கள் — விழிகளில் நீர் பாய்ச்சும் விபரீத நிகழ்ச்சிகள் —அவரது பார்வையில தென் படவில்லையா?

அவரது ஒளி இழந்துவிட்ட கண்களிலிருந்து தப்பிய தாங்கவொண்ணா கோரச் சம்பவங்கள் ஏராளம்!

"வறுமையின் விளைவால் ஒரு கொடுமையான சம்பவம் நடைபெற்றிருக்கிறது! ஒரு மாஜி சர்க்கார் உத்தியோகஸ்தர் — பிராமண வகுப்பைச் சேர்ந்தவர்—வறுமை காரணமாக தன் மனைவி, மூன்று குழந்தைகளுடன் தற்கொலை புரிந்து கொண்டார்! அவரது வீட்டிலுள்ள ஓர் அறையின் கதவு இரண்டு நாட்களாகத் திறக்கப்படாததையும், கெட்ட நாற்றம் எழும்புவதையும் கண்ட பக்கத்தில் வசிப்பவர்கள் அறையின் கதவை உடைத்த போது ஐவரின் பிணங்களையும் கண்டனர்! அனைவரும் விஷமருந்தி வரிசையாகப் படுத்திருந்தனர்! எதிரே கடவுளின் படத்துக்கு சாவதற்கு முன்தான் நைவேத்தியம் செய்து பூஜித்திருக்கின்றனர் —படத்திற்கு புதிய மாலைகளையும் சூட்டியிருக்கின்றனர். குடும்பத் தலைவரின் கையொப்பமிட்ட கடிதத்தில், 'என் குடும்பம் அழிவதற்குக் காரணம் யாருமில்லை; பொல்லாத வறுமைதான்' என்று குறிப்பிட்டிருக்கிறார்!..."

—நினைத்தவுடனேயே நெஞ்சிலே நடுக்கத்தை உண்டாக்கும் இந்த நிகழ்ச்சி இரு திங்களுக்கு முன்னால் நம்மிடையே நடைபெற்றிருக்கிறது! ஏடுகள் அனைத்தும் வெளியிட்ட இந்த செய்தி அறிந்து நாடே துணுக்குற்றது!

ஆண்டவனுக்கு முன்னால் ஐவர் தங்கள் உயிரைத் தாங்களே மாய்த்துக் கொண்டிருக்கின்றனர்—காரணம் வறுமை!

குதூகலம் கொப்பளிக்க வேண்டிய குடும்பத்தில் வறுமை புகுந்தது; கூண்டோடு அழித்து விட்டது! "கொடுமை!

கோவை மாவட்ட

தி. மு. கழக 3-வது மாநாடு

1958 ஜூலை 5, 6 (சனி, ஞாயிறு) நாட்களில்

கோபிச்செட்டிப்பாளையம்

வி. பி. இராசு நகரில் அமைந்துள்ள அர்ச்சுனன் பந்தல் - நாகம்மையார் அரங்கில் நடைபெறும்.

தலைவர்:

ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம். எல். ஏ.

திறப்பாளர்:

ஆர். தருமலிங்கம் எம். பி.

அறிஞர் அண்ணா,

பொதுச் செயலாளர்

நெடுஞ்செழியன்

மற்றும் கழக முன்னணி வீரர்கள், எம். எல். ஏ.க்கள், கழகக் கலைஞர்கள் எம். ஜி. ஆர்., கே. ஆர். ஆர்., எஸ். எஸ். இராசேந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

மார்க்சிஸ்ட்டிய உழவர் தொழிலாளர் கட்சி எம். பி.க்கள் பார்வையாளராகக் கலந்து கொள்கின்றனர்.

இரு நாட்களிலும் இசை நிகழ்ச்சி உண்டு.

5-7-58 சனி இரவு

மு. கருணாநிதி நடிக்கும் "உதய சூரியன்" நாடகம் நடைபெறும்.

இரு நாட்களுக்கும் நுழைவுக் கட்டணம்: ரூ. 5, 3, 2. பெண்களுக்கு ரூ. 1.

கொடுமை!!" என்று குமுறுகிறது நெஞ்சம்!

இந்த விபரீதச் சம்பவம் நடந்திருப்பது எங்கே?

திருச்சியில்—தென்னகத்தில்—காமராசர் குறிப்பிடுகிறாரே; முன்னேற்றம் அடைந்து விட்டதாக; அந்தத் தென்னகத்தில்தான்!

ஆனாலும் காமராசர் சொல்லுகிறார்—அப்பட்டமாகப் புளுகுகிறார் — தென்னாடு நல்ல நிலையை அடைந்து விட்டது என்று!

இதை நம்பத்தான் வேண்டுமாம்—கொட்டை எழுத்துக்களிலே தலைப்பிட்டு அவரது பேச்சைப் பிரசுரிக்கும் தேசிய ஏடுகள் இப்படிக் கருதுகின்றன! விளம்பரம் தருகின்றன!

இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஒன்றா; இரண்டா? அழுகுமிழும் அன்புக் குழந்தைகளை—மழலை மொழிச் செல்வங்களை—'மார்க்கெட்'டிற்குக் கொண்டு வந்த சோகத்தை நாடு கண்டிருக்கிறது! 'பிள்ளையோ பிள்ளை!' என்று விலை கூறி, அதே சமயம் இந் நாட்டின் "முன்னேற்றமே முன்னேற்றம்" என்று உணர்திய கொடுமையையும் நாடு மறந்திருக்காது!

அதோடு மட்டுமல்ல; காத்திருந்து பெற்ற தங்கம் நிகர் குழந்தைகளை—இந்த நாட்டின் நாளைய மன்னர்களை 'நமனுல'குக்கு அனுப்பிய மாதாக்கள்—

கரம் பிடித்தவளின் கற்பை கடைச் சரக்காக்கி சாலையோரத்துக்குத் துணிந்து கொண்டு வந்த கணவன்மார்கள்—

வறுமை பெற்றெடுத்த இத்தகைய சந்தர்ப்பக் குற்றவாளிகளை நாம் தினம் தினம் பார்க்கத்தான் செய்கிறோம்! அதேநேரத்தில் தேடவும் செய்கிறோம், காமராசர் குறிப்பிடுகிற 'நல்ல நிலைமை' எங்கேயென்று. தேடுகிற கண்களில் தென்படுகிற செய்திகளோ இப்படித்தான் இருக்கின்றன...

"விருத்தாசலம் ரயில் சந்திப்புககு மேற்குப் புறமாக ஒரு பர்லாங் தூரத்திலிருக்கும் கிணறு ஒன்றிலிருந்து மூன்று பிணங்கள் எடுக்கப்பட்டன! புதுக்குப்பத்தில் வசிக்கின்ற ஜம்சுதீன் என்பவரின் மனைவியான இருபத்தேழு வயதுடைய ஹானிபாய்தான் தன் இரு குழந்தைகளுடன் கிணற்றில் குதித்துத் தற்கொலை செய்துகொண்டு விட்டாள்; வறுமை காரணமாக! கணவன் வேலை தேடிச் சென்ற நேரத்தில் இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது!..."

—சென்ற கிழமை, 26-6-58 அன்று இந்த பயங்கர நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது, விருத்தாசலத்தில்! நாடு நல்ல நிலை அடைந்துவிட்டதாக அமைச்சருடைய சொற்பொழிவு பிரசுரமாகியிருக்கும் ஏட்டிலேயே இந்த வாட்டம்தரும் செய்தியும் காணப்படுகிறது.

பெற்றவளையே கொலைகாரியாக மாற்றிவிடுகிறது, வறுமை! நீர் எடுக்க கிணற்றில் விட்ட வாளியில் பச்சிளம் சிசுக்களின் அழுகிப் போன பிணங்கள் கிடைக்கின்றன! இது கொடுமையல்லவா?

நான்கு வயதைத் தாண்டாத பெண் குழந்தையையும், ஒன்றரை வயது ஆண் மகவையும் தன்னோடு அழைத்துச் சென்று விட்டாள், அந்த விருத்தாசலத்து அன்னை!

விருதுநகராரின் கண்களுக்கு இந்தத் தாய் தென்படவில்லையா? வறுமையை—வாழ முடியாத் தன்மையை—தாங்க முடியாத எத்தனையோ பெற்றவர்களுடைய நெஞ்சிலே கொலை வெறி புகுந்து கொண்ட கொடுமையை 'முன்னேறிவிட்ட' இந்த நாட்டிலே ஏராளமாகக் காட்ட முடியும்!

வறுமைத் தேள் கொட்டி வாழ்வைத் தட்டிப் பறித்துச் செல்லும் பயங்கரங்கள் வளமெலாம் பெற்ற தென்னகத்தில் நிகழ்வானேன்? நெஞ்சிலே நிறைந்து நிற்கும் சோகத்திற்கிடையிலேயும் இந்த வினாவை எழுப்பிக் கொண்டால், கிடைக்கின்ற ஒரே பதில் 'வளமுண்டு; வகையுண்டு; ஆனால் வாழ்வில்லை; வடக்கோடு நாம் இணைந்து நிற்பதால் ஏற்படுகின்ற தொல்லை இவை!' என்ற அடிப்படை உண்மை மிகச் சாதாரணமாகப் புலப்பட்டுவிடும்.

ஆனால் ஒளியிழந்து போன காமராசரது கண்களில் வடக்கு—தெற்கு பிரச்சினை வரட்டு வாதமாகத் தென்படுகிறது. தென்னகம் இடர்பாடின்றி—இடுக்கண்கள் களைந்து இன்ப வாழ்வு நடத்துகின்ற காட்சியை எங்கே காண்கிறார் அவர்?

இங்கே காலமெலாம் நடந்து வருகின்ற போராட்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல!

'வேலைக் கிடைக்கவில்லையே' என்ற குரல் நாளெல்லாம் பெருகி—கிடைத்தவர்கள் ஊதியம் போதவில்லையே என்று காலமெல்லாம் போரிட—தென்னகத்தின் பெருமை உலகமெல்லாம் பரவிட—நமது அமைச்சரின் வாய் மட்டும அவற்றை மறைத்திட முடியுமா?

"இன்னும் ஆறுமாத காலத்திற்குள் தமிழ்நாடு என். ஜி. ஓ. வினரின் சம்பள விகிதம், கிராகிப்படி- ஆகியவற்றைத் திருத்தி அமைப்பதுபற்றி சர்க்கார் தங்கள் முடிவைத் தெரிவித்தாக வேண்டும். அதற்கு சர்க்கார் தவறினால், மத்திய சங்கம் நிர்ணயிக்கும் ஒரு நாளில் வேலைநிறுத்தம் செய்வதுபற்றி சங்கம் வாக்கெடுப்பு நடத்தத் தவறாது!"

—காமராசருடைய அரசாங்கத்துக்கு, அமைச்சர் பக்தவத்சலனாருடைய முன்னிலையில் இப்படி எச்சரிக்கை அனுப்பியிருக்கிறார்கள், தமிழ்நாட்டு கெஜட் பதிவில்லாத அரசாங்க ஊழியர்கள்!

23—6—58 அன்று சேலத்தில் நடைபெற்ற அவர்களது மாநாடு பல முறைகளுக்குப் பின் மீண்டும் தங்கள் உரிமைக்கு வாதாடியிருக்கிறது!

அகலக் கிளை விரித்து—விழுதுகள் பல விட்டு நிமிர்ந்து நிற்கிறது அரசாங்க ஆலமரம் என்றால், அதன் ஆணி வேர்தான் இந்த அவல வாழ்விற்குரிய ஏழை அலுவலர்கள்!

இன்றோ; நேற்றோ அல்ல—பன்னெடுங் காலமாகவே அந்தப் பரிதாபத்துக்குரியவர்கள் தங்கள் ஊதியக் குறைவுபற்றி முறையிட்டு — முகாரிபாடிக் கொண்டுதான் வருகிறார்கள்.

விஷமென ஏறி வருகின்ற விலை உயர்வைச் சுட்டிக் காட்டி—குடும்பத்தோடு குறை உணவு உண்டு வாழும் கொடுமையை எடுத்துக்காட்டி — போராடிக் கொண்டுதான் வருகிறது, அந்த அரசியல் இயந்திரத்தின் அச்சாணி வர்க்கம்!

நாட்டின் 'நிர்வாகப் பெருமை'யை — நிம்மதியற்ற வாழ்வின் கொடுமையைப் பறைசாற்றுகிறது அவர்களது ஏழ்மை வாழ்க்கை!

இருந்தாலும் காமராசர் துணிந்து பேசுகிறார், தென்னகத்தின் மகத்தான வளர்ச்சி பற்றி!

எங்கே அவர் குறிப்பிடுகிற நல்ல நிலைமை?

அது இங்கே இல்லை; வடக்கே உண்டு — என்று இப்போது சொல்லுகிறார் மைசூரின் முன்னாள் முதலமைச்சர் நிஜலிங்கப்பா!

காமராசர் கண்களுக்கு அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தவராகத் தெரியமாட்டார். ஏனெனில், அவர் கருநாடகக் காங்கிரஸ் பெரும் புள்ளிகளில் ஒருவர்! அவர்தான் இப்போது குறிப்பிடுகிறார் — துணிந்து—மேலிடத்தின் கோபப் பார்வையையும் லட்சியம் செய்யாமல் — தென்னாடு மத்திய சர்க்காரால் புறக்கணிக்கப்படுகிறது என்று!

"தபால்—தந்தி ஊழியருக்குக் குடியிருக்க வீட்டு வசதி செய்து தரும் விவகாரத்தில் தென்னாடு புறக்கணிக்கப் படுகிறது; அலட்சியப் படுத்த படுகிறது! இந்த நியாயமான கோரிக்கையை மத்திய சர்க்கார் ஏற்கத்தான் வேண்டும்! இல்லையேல், இதற்காக ஒரு கிளர்ச்சி நடத்தினால் அது தேச விரோதமானது என்று யாரும் கூறிவிடமுடியாது!..."

கருநாடகத் தபால் தந்தி ஊழிகருகளுக்கு மத்தியிலே இந்த மறைக்க முடியாத—தடுக்கமுடியாத பேருண்மை — மடை திறந்த வெள்ளமென வெளியே பாய்ந்து விட்டது!

"மத்திய சர்க்கார் தென்னாட்டைப் புறக்கணிக்கிறது; அலட்சியப்படுத்துகிறது" — நாம் சொல்லுகின்ற உண்மை!

"இதற்காக ஒரு கிளர்ச்சி நடந்தால் அது தேச விரோதம் என்று யாரும் கூறிவிட முடியாது!" — அதற்கு அவர் சொல்லுகின்ற வழி!

நல்ல நிலை அடைந்துவிட்டதாக காமராசர் சொல்லுகின்ற தென்னாட்டின் ஒரு அங்கத்திலிருந்துதான் இப்படிக் குரல் எழும்புகிறது, 'நல்ல வசதி தேவை; அதைத் தர மறுக்கும் மத்திய சர்க்காரோடு கிளர்ச்சி தேவை' என்று! அவர் அங்கம் வகிக்கும் காங்கிரஸ் கூடாரத்திலிருந்தே அந்தக் கூக்குரல் எழும்புவதுதான் விசித்திரம்!

'வடக்கு — தெற்கு பிரிவினை வரட்டுக்கூச்சல்' என்றுமுழங்குகின்ற காமராசரது கண்களில் ஏன் இந்த வேற்றுமை புலப்படவில்லை?

ஆமாம்; இங்கேதான் மீண்டும் சந்தேகம் ஏற்படுகிறது அவரது அறிவுக் கண்கள் ஒளி இழந்துவிட்டனவா என்று!

ஆகவேதான் எடுத்துக் காட்ட விரும்புகிறோம். "ஒளியிழந்த கண்ணினாய்! தேசியத்தார் ஆட்சியிலே தேம்பி அழுவோர் தொகை மிகுதி! நிர்வாக ஊழலும் நீங்காத கேடுகளும் கோடி கோடி! இதுதான் முன்னேற்றமா? இதுதான் நல்ல நிலையா? பாரீர்! பாரீர்!!" என்று!

ஃ

குருஷேவ் மாறிவருகிறார்!

மாலன்கோவை விரட்டினர்!

ஸ்டாலினது பெருமையைக் குலைத்தார்!

ரஷ்ய ஆதிக்கப் பிடியிலிருந்து தனி உரிமை பெறத் துடித்த ஹங்கேரி, போலந்து விடுதலை வீரர்களைச் சுட்டுக் குவித்தார்!

புல்கானினைத் தலைகுப்புறக் கவிழ்த்தார்!

இன்று ஹங்கேரியின் முன்னாள் முதல்வர் இம்ரே நாகியைத் தூக்கிலிட்டு, தன் சுயரூபத்தைக் காட்டிவிட்டார்!

[அன்பளிப்பு: 'தாட்', டெல்லி]

தி. மு. கழக மத்திய செயற் குழு ★ முடிவுகள்! ★

[திராவிட முன்னேற்றக்கழக மத்திய செயற்குழுவின் அவசரக்கூட்டம் 30—6—58 மாலை 3-30 மணிக்கு சென்னை — இராயபுரம் 'அறிவக'த்தில், பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அப்போது கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.]

1. அனுதாபம்

தேசியப் போராட்டத்தில் சிறந்த பணியாற்றியவரும், பின்னர் காங்கிரஸ் ஏகாதிபத்திய ஆட்சி முறையைத் தீவிரமாக எதிர்த்து வந்தவரும், தொழிலாளர் தலைவருமான திரு. சக்கரை (செட்டியார்) அவர்களும் — மருத்துவத் துறையில் மேதையாக விளங்கி வந்தவரும், கல்வித் துறைக்குப் பேருதவி புரிந்து வந்தவருமான டாக்டர் குருசாமி (முதலியார்) அவர்களும் இயற்கை எய்தியமைக் குறித்து மிகவும் வருந்துவதுடன், அவர்களது குடும்பத்தாருக்கு இச்செயற்குழு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

2. கண்டனம்

(அ) சென்னைத் துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தின்போது, கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சு, தடியடிப் பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம் போன்ற அத்துமீறிய அடக்குமுறைகளை அவிழ்த்துவிட்டு, ஆறு பேர் மாண்டுபோகவும், நூற்றுக் கணக்கானவர்கள் படுகாயமுறவும் ஆன கொடுமையைப் புரிந்த சென்னை அரசியலாரின் போக்கை இச்செயற்குழு வன்மையாகக் கண்டிப்பதுடன், அமைதியான முறையில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும் போராட்டங்களையும் அடக்குமுறையால் சமாளிப்பதை விட்டு, ஜனநாயக முறைக்கு மதிப்பளித்து, மக்களின் குறைபாடுகளையும், பாட்டாளிகளின் துயரங்களையும் நீக்கவேண்டுமென்று அரசியலாரை இச்செயற்குழு வற்புறுத்துகிறது.

(அ) துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியாகி மாண்டவர்களை இழந்து வருந்தும் குடும்பத்தினருக்கும், படுகாயமுற்று அல்லற்படுவோருக்கும் இச்செயற்குழுக் கூட்டம் தன் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

(இ) துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியானவர்கள் குடும்பத்தினருக்கும், அடக்குமுறைக்கு ஆளாகிப் படுகாயமுற்றவர்களுக்கும், தக்க நஷ்டஈடு தருமாறு அரசியலாரை இச் செயற்குழு வற்புறுத்துகிறது.

3. தூத்துக்குடித் தேர்தல்-வேண்டுகோள்

(அ) 1958, ஜூலைத் திங்கள், 25—ம் நாளன்று நடைபெறப் போகும் தூத்துக்குடித் தொகுதி இடைத் தேர்தலுக்கான அலுவல்களைத் தலைமைக் கழக சார்பில் சென்றிருந்து பொறுப்பேற்று நடத்தவும், அதற்கான நிதி திரட்டவும் தோழர்கள் மு. கருணாநிதி, கே. ஏ. மதியழகன், மதுரை—எஸ். முத்து ஆகியோர் கொண்ட துணைக்குழு ஒன்றை இச்செயற்குழு அமைக்கிறது.

(ஆ) தூத்துக்குடித் தொகுதி இடைத்தேர்தலின் முக்கியத்துவத்தை உணர்ந்து, ஆங்காங்குள்ள கிளைக் கழகங்களும், துணை அமைப்புகளும், தனிப்பட்ட நண்பர்களும் தங்கள் அன்பையும், ஆர்வத்தையும், ஆதரவையும் காட்டும் வகையில் பொருள் திரட்டி உடனடியாகத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்குமாறு இச்செயற்குழு விரும்பிக் கேட்டுக் கொள்கிறது.

ஃ

சட்டங்கள் பெருகிட குற்றங்கள் மலிகின்றன!

★

கொற்றவன் ஆட்சி கோணலற்றது என்றால் நாட்டிலே குற்றங்கள் குறைந்திருக்கும்— இதுதான் நல்லாட்சியின் இலக்கணம்! தொன்றுதொட்டு கொள்ளப்படும் நியதி இது!

எத்தனை பலமிருந்து என்ன; கடுகத்தனை கோளாறு நிர்வாக இயந்திரத்திலே ஏற்பட்டுவிட்டாலும் அடுத்துவரும் தொல்லைகள் எண்ணத் தொலையாதது!

நமையாளும் பெருமைபெற்ற காங்கிரஸ் சர்க்காரிடம் பலத்திற்குப் பஞ்சமில்லை!

அதிகார பலமுண்டு-அதைப் பயன்படுத்த தணியாத ஆசையுமுண்டு — சட்டத்தின் துணையுண்டு — வெட்டுண்ட வாழை போல் மக்களைச் சுட்டு வீழ்த்தவும் குண்டுகளின் குவியல் உண்டு!

பணபலமுண்டு—உலக நாடுகளிடம் கைநீட்டி நினைத்த நேரத்தில் கோடிக் கணக்கில் கடன் பெறுவது மட்டுமல்ல; திரை மறைவிலே சலுகைகள் பெற்று, வரையறையின்றி பொருள் தர தேசிய முதலாளிகளும் ஏராளம் உண்டு!

விளம்பர பலம் உண்டு — தேசிய ஏடுகளின் திருப்பணியே அரசுக்கு விளம்பரம் தேடுவதுதான்! அது மட்டுமல்ல; சர்க்காரின் கஜானா சுய புராணம் பாடவேண்டுமென்றால் தயங்காது வாயைத் திறந்துகொள்ளும்!

அதோடு மட்டுமல்ல; ஐந்தாண்டுத் திட்டப் பிரச்சாரத்திற்கென திரைப்படக் கொட்டகைகள் நன்கு பயன்படுகின்றன, இப்போதெல்லாம்!

இத்தனை பலம் இருந்தென்ன; நிர்வாக பலம் என்னவோ கேலிக்குரியதாகவே — கேள்விக்குறியாகவேதான் இருக்கிறது!

குற்றவாளிகளின் தொகை நாட்டில் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே போகிறது! சிறைச்சாலைகள் ஆட்டுமந்தைகளை அடைத்துப் பூட்டும் 'பட்டி'களைப் போல் மாறிக் கொண்டிருக்கின்றன—அங்கும் ஜன நெருக்கம்!

இருந்தாலும் ஏட்டிலே சட்டங்கள் இருக்கின்றன, ஏராளமாக!

குற்றங்களைக் குறைக்கத்தான் சட்டங்கள் பயன்பட வேண்டும், நேரான நிர்வாகம் என்றால்! ஆனால் நம்முடைய சர்க்கார் ஏடுகள் காட்டுகின்ற கணக்குகளை கவனித்தால் நெஞ்சு துணுக்குறத்தான் செய்கிறது!

உதாரணத்திற்கு ஒன்று...

மதுவிலக்கு வெற்றி பெற்றுவிட்டதாக இன்று மார்தட்டிக் கொள்ளுகிறார்கள் ஆட்சி பீடத்தினர்!

அந்த 'மகத்தான வெற்றி'யை மக்களுக்கு எடுத்துக் காட்டுகிறது சர்க்காரது அறிக்கை ஒன்று!

மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்கு எண்ணிக்கைகள் ஆண்டு வாரியாக கீழே தரப்பட்டிருக்கின்றன; கவனியுங்கள்:

1952 — 57,444
1953 — 60,237
1954 — 70,851
1955 — 97,448
1956 —1,30,964
1957 —2,01,149

வருடா வருடம் குற்றங்களின் எண்ணிக்கை ஆயிரக் கணக்கிலே பெருகிக் கொண்டே செல்லுகின்றன!

இப்படி குற்றவாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போவதென்றால் அதற்கென்று சட்டங்கள் ஏன்? அதன் காவலர்களாக ஆயிரக் கணக்கான அதிகாரிகள் ஏன்?

மதுவிலக்கினால் பயன்பெற்றவர்கள் பலர் என்று கூறலாம்! ஆனாலும் சென்ற ஒரே ஒரு ஆண்டைப் பொறுத்தவரையில் இரண்டு லட்சம் குற்றவாளிகளையும் நாட்டிலே உற்பத்தி செய்திருக்கிறது அந்தச் சட்டம்!

அதற்கு என்ன காரணம்? சட்டத்தின் துணையிருந்தும், அதைப் பயன்படுத்திக் குற்றங்களைக் குறைக்க நிர்வாகத்திலே வலுவில்லை—என்பதுதானே!

மருத்துவ மேதை
டாக்டர் குருசாமி மறைவு

மருத்துவத் துறையில் வல்லுநர் என்ற சிறப்பான பெயரைப் பெற்று, நாட்டுக்கும் மக்களுக்கும் நற்பணியாற்றி வந்த டாக்டர் திரு. எம். ஆர். குருசாமி (முதலியார்) சென்ற 26—6—58 அன்று, இரவு 8—30 மணிக்கு, தமது இல்லத்தில் இயற்கை அடைந்தார் என்ற செய்தியை மிக்க வருத்தத்துடனும், வேதனையுடனும் திராவிட மக்களுக்கு அறிவித்துக் கொள்கிறோம்.

அவரது மறைவு நாட்டுக்கு ஈடு செய்ய முடியாத பெரும் இழப்பை உண்டாக்கியுள்ளது. ஒரு சிறந்த டாக்டரையும், கொடை வள்ளலையும், கல்வித் துறைக் காவலரையும், ஏழைப் பங்காளரையும் நாடு இழந்து விட்டது. ஆனால் அவரது சேவை சரித்திரத்தில் நல்லிடம் பொறித்துக் கொண்டு விட்டது.

எண்ணக் குவியலாய் -
வண்ணக் கருவூலமாய் -
தயாராகிறது
முத்தாரம்
ஜூலை இதழ்!

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, சென்னை-6, தமிழ்நாடு.